Date:21.09.2023

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS. 27/2018

வா.சா.**2**

**பெயர்-** திரு.கோபி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பாக்கியலஷ்மி வகையறா 1 ஏக்கர் 99 1/4 செண்ட் நிலத்தை பொறுத்து என் தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் ஏற்கனவே பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 3ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் எனக்கும், என் தம்பிகள் அய்யப்பன், பாலமுருகன் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த கிரைய உடன்படிக்கை ஏற்கனவே பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் மேற்படி சொத்தை பொறுத்து 13.11.2013 தேதியில் ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் இணைவழி சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.5 என்றால் சரிதான். அதில் ரூ.7,00,000/ கிரைய தேதியில் ரொக்கமாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் அப்பாவிடம் பணம் கொடுக்கவில்லை. பவர் கொடுத்தவரிடம் தான் பணம் கொடுத்தேன். கிரைய உடன்படிக்கை பத்திரத்தில்( பி.வா.சா.ஆ.4) கிரைய தொகை ரூ.1,05000/ என காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதில் முன் பணமாக ரூ.1,00,000/ அளிக்கப்பட்டது என்றும், மீத தொகை ரூ.5,000/ என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5ல் கிரையம் பெற்ற சொத்தினை எனது மனைவி சரஸ்வதிக்கு 1.9.2017ல் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அதனுடைய சான்றிட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அது பி.வா.சா.ஆ.6 ஆகும். என் தகப்பனார் சொல்லி எனது சகோதரி கற்பகத்திற்கு 3 ஏக்கர் 11செண்ட் நிலமும், கிணறு, மோட்டார் பம்பு செட், மின் இணைப்பு 67 உள்பட வா.சா.ஆ.5ன் படி நான் செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். என் தகப்பனார் 12.6.2013ல் என் சகோதரிகள் நளினி, கற்பகத்திற்கு ஒரு உயில் எழுதி

வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலின் நகலை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் பத்திரம் எனது தங்கை கற்பகத்திடம் உள்ளது. அந்த சொத்தை என் அப்பா கமலகண்ணன் மகனிடம் அடமானம் போட்டுள்ளார். எவ்வளவு ரூபாய் என்றும், அது பதிவு செய்யப்பட்டதா என்றும் எனக்கு தெரியாது. அந்த உயிலின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது தான் பி.வா.சா.ஆ.7 ஆகும். அதில் என் அப்பா தனக்கு பூர்வீகமாக பாத்தியமானது என்று எழுதி உள்ளார் என்றால் சரிதான். சொத்துக்கள் நான் பாலமுருகன் மற்றும் அய்யப்பன் ஆகியோர் சேர்ந்து கிரையம் வாங்கி உள்ளோம் என்றால் சரிதான். சில சொத்துக்கள் வாங்கியுள்ளோம். அதே போல் பாலமுருகனும், அய்யப்பனும் தனித்தனியாக சொத்துக்கள் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்களை வைத்து வாங்கியுள்ளார்கள். தாத்தா சம்பாதித்த சொத்தை அப்பாவிற்கு வந்த பாகத்தை விற்று வாங்கியுள்ளார்கள். அந்த சொத்தை அப்பா தான் கிரையம் கொடுத்தார். அந்த கிரையத்தில் நான் கையெழுத்து போடவில்லை. மற்ற இருவர் கையெழுத்து போட்டார்களா என்று நான் படித்து பார்க்கவில்லை. எனக்கு தெரியாது. கிரையம் வாங்கிய சொத்தில் எனக்கும் பாகம் கொடுப்பதாக இருந்தால் நான் கையெழுத்துபோடுவேன் என்றும், இல்லை என்றால் போடமாட்டேன் என்றும் சொல்லிவிட்டேன். அய்யப்பன், பாலமுருகன் பெயரில் 24.7.2002ல் கிரையம் பெறப்பட்ட ஆவணம் நான் தாக்கல் செய்து வாசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தில் நாளது தேதியில் ரொக்கமாக பெற்றுக்கொண்ட தொகை ரூ.20,000/ என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அய்யப்பன், பாலமுருகன் பெயரில் 26.7.2002ல் சம்மத ஆவணம் நான் தாக்கல் செய்து வாசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அய்யப்பன், பாலமுருகன் பெயரில் 7.11.2002ல் ஒரு கிரைய ஆவணம் நான் தாக்கல் செய்து வாசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அன்றைய தேதியில் ரொக்கமாக பெற்றுக்கொண்ட தொகை ரூ.10,000/என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் 7 நானும் என் தகப்பனாரும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். அந்த கிரையம் ஏற்பட்டது எனக்கும் என் அப்பாவிற்கும் தெரியும். அழகப்ப கவுண்டர் குமாரர் அய்யனாருக்கு என் தகப்பானர் நான், என் சகோதரர்கள் அய்யப்பன், பாலமுருகன், தாய் கலுவம்மாள், என்னுடைய பெரியப்பா மகள் தெய்வமதி ஆகியோர் சேர்ந்து கிரையம் கொடுத்தோம். அந்த கிரைய பத்திரம் ஏற்கனவே பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சொத்து

வாங்குவதற்காக நான் சொத்தை விற்றேன். அப்போது சகோதரிகள் திருமணத்திற்கு கிரையம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த சொத்து யார் கிரையம் வாங்கிய சொத்து என்றால் பூர்வீக சொத்தில் என் அப்பாவிற்கு பாகம் வந்தது. என் தகப்பனார் 2.12.2002ல் விமலா, விஜயா ஆகியோருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சொத்து அய்யப்பன், பாலமுருகன் பெயரில் சொத்து வாங்குவதற்காக விற்கப்பட்டது. அதில் நான் எனக்கு பாகம் எழுதாததால் கையெழுத்து போடவில்லை. இந்த கிரையம் என் சகோதரி நளினியின் திருமண செலவிற்காக ஏற்படுத்தப்பட்டதா இல்லையா என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் என் குமாரத்தி நளினி திருமண செலவிற்காக என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அந்த ஆவணத்தில் வேறு நஞ்சை நிலம் கிரையம் பெறுவதற்காக என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரையம் கொடுத்த நிலம் 1 ஏக்கர் 40சென்ட் நிலமாகும். இந்த சொத்தை என் அப்பா கிரையம் வாங்கினாரா என்றால் இல்லை. பூர்வீக சொத்து. 27.4.2005ல் நான், என் சகோதரர்கள் அய்யப்பன், பாலமுருகன் ஆகியோர் சேர்ந்து 79சென்ட் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும். 13.7.2006ல் நான், என் சகோதரர்கள் அய்யப்பன், பாலமுருகன் ஆகியோர் சேர்ந்து 53சென்ட் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.9 ஆகும். 27.7.2006ல் நான், என் சகோதரர்கள் அய்யப்பன், பாலமுருகன் ஆகியோர் சேர்ந்து 3 ஏக்கர் 67 3/4 சென்ட் நிலம் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10ஆகும். பி.வா.சா.ஆ.8 முதல் 10 ஆவண சொத்துக்கள் எங்களது தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். பாலமுருகன், அய்யப்பன் ஆகியோர் வா.சா.ஆ.6, 7 ஆகியவற்றின் மூலம் கிரையம் வாங்கிய சொத்துக்கள் குடும்ப சொத்துக்கள் ஆகும். பி.வா.சா.ஆ.8 முதல் 10 ஆவண சொத்துக்களை கடன் வாங்கி நான் வாங்கினேன். அதை நான் யாரிடம் கடன் வாங்கினேன் என்றால் 12பேருக்கு மேல் கொஞ்ச கொஞ்சமாக கடன் வாங்கினேன். மொத்தமாக நான் சுமார் 5 அல்லது 6 லட்சம் கடன் வாங்கினேன். கடனை நான் தனிப்பட்ட முறையில் வாங்கினேன். தனிப்பட்ட முறையில் வாங்கியும் எதற்கு என் சகோதரர்கள் பெயரில் கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கு அப்போது திருமணம் ஆகவில்லை. நாங்கள் 3 பேரும் ஒன்றாக இருந்தோம். எனவே பத்திரம் வாங்கி 3பேர் பெயரில் எழுதப்பட்டது. நான் பில்டிங்

ஒப்பந்த வேலை செய்து வந்தேன். என் சகோதரர்கள் அய்யப்பன் மட்டும் மோட்டார் வாகன பராமரிப்பு பணி செய்து வந்தார். 5,6 டிராக்டர், லாரி 1, டிப்பர் டிராக்டர் 1, டோசர் 1, டிரைலர் 3 ஆகியவை வைத்திருந்தார். இந்த அனைத்து வாகனங்களையும் தனிப்பட்ட முறையில் அய்யப்பன் மட்டும் வைத்திருந்தார். அவர் அதை இயக்கி பணம் சம்பாதித்து வந்தார் என்றால் சரிதான். மேலும் அவரிடம் சுமோ, இன்டிகா கார்கள் இருந்தது. இந்த வாகனங்கள் எப்படி வாங்கப்பட்டது என்றால் குடும்ப சொத்து வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது. குடும்பம் என்று சொல்வது என் அப்பா, அம்மாவையும் உள்ளடக்கியதூ ஆகும். அனைவரும் ஒரே வீட்டில் ஒரே சமையல் தான் செய்து வந்தோம். அய்யப்பன் வண்டியை பராமரித்தது குறித்த தொகை முழுக்க அவரின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. நானும் என் அப்பாவும் இது குறித்து அய்யப்பனிடம் கேட்டோமா என்றால் என் அப்பா என்னிடம் நீ பில்டிங் வேலை செய்து வருகிறாய் அதே போல் அவன் குடும்பத்தை பார்த்து வருகிறான். எனவே தொகை அவரிடமே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார். நான் பில்டிங் வேலை செய்து வரும் பணத்தை என் அப்பாவிடம் கொடுப்பேனா என்றால் பற்றாக்குறையாக இருக்கும்போது அவர் கேட்டால் கொடுப்பேன். அய்யப்பனும், பாலமுருகனும், சித்ரா, சுபத்ரா மற்றும் கீதா ஆகியோருடன் சேர்ந்து சண்முகத்திற்கு 16.9.2010ல் ஒரு கிரையம் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சண்முகம் கல்யாண மண்டபம் கட்டுவதற்காக அந்த இடத்தை கிரையம் கொடுத்தார்கள். அய்யப்பனும், பாலமுருகனும் எந்த சொத்தை கிரையம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியும். 2002ல் அய்யப்பனும், பாலமுருகனும் கிரையம் வாங்கிய சொத்தை தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் இணையவழி நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது பி.வா.சா.ஆ.11 ஆகும். என்னிடம் காட்டப்படும் 19.1.2016 பாகபிரிவினையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. தற்போது சாட்சி வெத்து பத்திரத்தில் தன்னை அடித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும், இது சம்மந்தமாக நான் புதுப்பேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் கூறுகிறார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2ம் பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. மேற்படி கையெழுத்து பி.வா.சா.ஆ.12 ஆகும்.நான் புதுப்பேட்டை காவல்நிலையத்தில் என்னை அடித்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கினார்கள் என்று புகார் கொடுத்துள்ளேன்.

அதில் எதுவும் எழுதவில்லை. வெத்து பத்திரத்தில் நான் கையெழுத்து போட்டேன். 5 பிராமசரிநோட்டு உள்பட கொடுத்துள்ளேன். எந்த தேதி, மாதம், வருடம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எவ்வளவு வருடத்திற்கு முன்பு கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சுமார் 5 வருடம் இருக்கும். புகார் நகல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. நான் அதில் என்னை அடித்து வெற்று பத்திரத்தில் கையெழுத்து வாங்கியதாக சொல்லியுள்ளேன். அதில் உள்ள சாட்சிகள் யார் என்று எனக்கு தெரியாது. இது எந்தெந்த சொத்துக்களை எப்படி பிரிக்க வேண்டும் என்று பஞ்சாயத்தார் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை என்றால் தவறு. மரகதபுரம் மணி எனக்கு தெரியும். முத்தியால்பேட்டை சிவா எனக்கு தெரியும். தம்பியிடம் வருவார் போவார் அதனால் தெரியும். கோவிந்தம்மாள் நகரில் சொத்து வாங்கப்பட்டதா என்றால் சொத்து வாங்கவில்லை. நான் பீல்டிங் கட்டிக்கொடுப்பவர் என்ற முறையில் பவர் ஏஜென்ட் என்ற அடிப்படையில் அண்ணாதுரை என்பவருக்கு வீடு கட்டிக்கொடுத்தேன். நான் கோவிந்தம்மாள் நகரில் பிளாட் போட்டு விற்றேனா இல்லையா என்றால் இல்லை.